கணக்கில் எடுத்துக்கொண்டு தர வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசிலே இருந்து எந்த அளவுக்கு கிடைக்குமோ அதற்குத் தக்கபடி இந்த நிதியாண்டிலேயே திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிற் பயிற்சிக் கல்வி முடித்த பயிற்சியாளர்கள்.

*வினா எண் 129—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் (பெருநகர்ப் பிரிவு) ஐ.டி.ஐ பயிற்சியாளர்கள் 1973–74, 1974–75 ஆகிய ஆண்டுகளில் பயிற்சி முடித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனைப் பேருக்கு வேலை தரப் பட்டது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 1973–74-ல் 332 ஐ.டி.ஐ. பயிற்சியாளரும் 1974–75-ல் 225 பேரும் பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர் பிரிவில்) பயிற்சி முடித்தனர்.

(ஆ) அவர்களில் 1973–74-ல், 68 பேருக்கும் 1974–75-ல் 33 பேருக்கும் வேலை தரப்பட்டது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆற்றுக் கால்வாய்கள்.

*வினா எண் 130—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நீர்ச் சேதாரத்தைத் தவிர்க்க நீர்ப் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் ஆற்றுக் கால்வாய்கள் குறுக்கி கட்டப்பட்டு வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஓர் விவர அறிக்கை* சபையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

*......120–121ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1979 ப்ப்ரவரி 22]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அவையின் விவர அறிக்கையில் ஆறுகளில அவசியமான இடங்களில், அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் கரைகளைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அண்மையிலே ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக மாயூரம் பகுதியில் பழவாற்றுக் கரை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கரையே இல்லாதிருந்த நிலையினை மாற்றுகின்ற வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 55 இலட்ச ரூபாய் அளவில் கரை அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கரைகளும் இப்போது சரியாக பராமரிக்கப்படாத காரணத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அதனை உடனடியாகத் தவிர்ப்பதற்கு அரசால் ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்திலேகூட நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சென்று பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பழவாற்றின் கரை உடைப்பின் காரணமாக பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் சேதம் அடைந்து வருவதை தவிர்ப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அந்தப் பகுதியில் பழவாற்றின் கரைகள் சமீப வெள்ளத்தின் போது அடைக்கப்பட்டிருந்ததை நானும் நேரிலே சென்று பார்த்து வந்து இருக்கிறேன். அதற்குரிய மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. காவிரி டெல்டா பகுதிகள் பயன்படுகின்ற வகையில் 70 கோடி ரூபாய் செலவிலே ஒரு திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட நான்கைந்து ஆண்டுகளாக வேலைகள் நடை பெற்றுக் கொண்டு வருகின்றன. ஆகவே பழுது பார்க்கப் படவேண்டிய இடங்கள் எல்லாம் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்தில் பாசனத் திட்ட முறைகளை மேம்படுத்த முன்னர் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் உலக வங்கியின் உதவியுடன் திட்டமொன்று தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது? அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு புதிய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 1968–69-ல் விரிவுபடுத்தப்பட்ட பழுது பார்க்கும் பணித்திட்டத்தின் கீழ் ரூ. 49 கோடிக்கு மதிப்பீடுகள் செய்து அதற்குப் பின்னர் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 70 கோடிக்கு அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் தொடர்ந்து நடை

பெறுகிற காரணத்தால் எல்லாப் பகுதிகளுமே இந்தத் திட்டத்தின்கீழ் பழுதுபார்க்கப்பட்டு சரி செய்யப்படும்.

திருமேனி ஏரி.

*வினா எண். 131—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்காவில் உள்ள திருமேனி ஏரியின் தென்கரையை பராமரிக்கவும், ஏரியில் நீரைத் தேக்கி விவசாயத்திற்கு நீர் அளிக்கவும், மீன் வளர்க்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரியின் தென் கரை ஏற்கனவே இவ்வாண்டு மராமத்து செய்யப்பட்டு விவசாயத்துக்கு பயன்படும் வகையில் நல்ல முறையிலுள்ளது. பாசன வசதிகளுக்கு, குந்தகம் ஏற்படுமாகையால் இந்த ஏரியில் மீன் வளர்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலூகா திருமேனி ஏரி ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாசனம் கொடுக்கக்கூடியது. திருமனைக் கோடு பகுதியைச் சேர்ந்தவர்கள் லிப்ட் இரிகேஷன் ஸ்கீம் வேண்டுமென்று கோரி அரசுக்கு விண்ணப்பத்திருக்கிறார்கள். அதற்குரிய ஆயத் தீர்வை கட்டவும் தயாராயிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திருமேனி ஏரி தென் கரையை வலுப்படுத்தி பாசனத்திற்கு உகந்த முறையில் தண்ணீர் அளிக்க அரசு சிறப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரி பாமினி ஆற்றிலிருந்து தனிக் கால்வாய் மூலம் கொண்டு வரப்படும் தண்ணீரால் நிரப்பப்படுகிறது. இதன் மூலம் பதியப் பட்ட ஆயக்கட்டின் அளவு 265 ஏக்கர் 59 சென்ட்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் ஆயிரக்கணக்கான ஏக்கர் இந்த ஏரியின் மூலம் பாசன வசதி பெறுவதில்லை. மேலும் இந்த திருமேனி ஆற்றின் கரையைப் பலப்படுத்தி அதன் மூலம் மீண்டும் பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்று பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஆயக்கட்டில் இருப்பது 265 ஏக்கர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சரியாக இருக்கலாம். ஆயக்கட்டில் இல்லாத பகுதிகளையும் கணக்கில்